**Starting time 12.20 P.M.**

# <u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>

## O.S. No.240/2015

Deposition of **<u>D.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A.Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 01.12.2023 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : ராமசாமி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u> தாவா சொத்தை நான் எப்பொழுது கிரயம் வாங்கினேன் என்றால், 24.10.2005. நான் எவ்வளவு விஸ்தீரணம் நிலம் கிரயம் பெற்றேன் என்றால், 67 ½ செண்ட். யாரிடம் கிரயம் பெற்றேன் என்றால், மாரிமுத்து. அவருடைய தம்பி பழனிச்சாமியிடம் நான் மற்றும் ஒரு 67 ½ செண்ட் நிலத்தை எந்த தேதியில் கிரயம் பெற்றேன் என்றால், 19.07.2005. அவர்களுக்கு அந்த சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால், அவருடைய தகப்பானார் முத்துசாமிக்கு டி கார்டு மூலமாக பாத்தியப்பட்டது.

2. நான் கிரயம் வாங்கியபோது முத்துசாமி உயிருடன் இல்லை என்றால், சரியல்ல. இருந்தார். முத்துசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்தை நான் கிரயம் பெற்ற பத்திரத்தில் முத்துசாமியிடம் நான் கையொப்பம் வாங்கவில்லை என்றால், சரியல்ல. முத்துசாமி மற்றும் அவரது மனைவி இருவருமே கையொப்பம் செய்தனர். சாட்சி பின்னிட்டு அந்த சமயத்தில் முத்துசாமி இறந்துவிட்டதாக கூறுகிறார். சொத்தை விலைக்கு வாங்கிய சமயத்தில் எவ்வளவு விலை பேசி எவ்வளவுக்கு வாங்கினேன் என்றால்,

ஒப்பந்ததின்போது ரூ. 25,000-மும், கிரயத்தின்போது ரூ.45,000 கொடுத்தேன். முத்துசாமிக்கு டி கார்டு மூலம் பாத்தியப்பட்ட சொத்து என்பதால் அவர் இறந்த பிறகு வாதிக்கு அது பூர்வீக சொத்து என்றால், சரியல்ல. மாரிமுத்துவிற்குதான் சொந்தம். வாதி அப்போது இளவர்.

3. நான் கிரயம் பெற்ற போது வாதிக்கு என்ன வயது என்றால், தெரியாது. மாரிமுத்துவும், பழனிச்சாமியும் தாவா சொத்தை வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்துக்கொண்டார்களா எனறால், ஆமாம். அதில் இருவருக்கும் தலா 67 ½ செண்ட் நிலம் ஒதுக்கப்பட்டது என்றால், ஆமாம். மாரிமுத்து இறந்தபிறகு வாதியும், மாரிமுத்துவின் மனைவி மகன்கள் அனைவரும் கூட்டாக அனுபவித்து வந்தார்களா என்றால், நான் கிரயம் பெறுவதற்கு முன்பாக அனுபவித்து வந்தார்கள், அதன்பிறகு நான்தான் அனுபவித்து வருகிறேன். இன்றைய தேதி வரையிலுமே தாவா சொத்தை அவர்கள்தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரியல்ல. என்னுடைய அனுபவித்தில்தான் இருந்து வருகிறது. வாதி இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்தார் என்றால், தெரியாது.

4. வாதிக்கு தாவா சொத்தில் 9/64 -ன் கீழ் பங்கு இருக்கிறது என்றால், பாகம் வராது. இளவராகதான் இருந்தார். இளவரான வாதிக்கு நான் வங்கியில் அவரது பங்கு பணத்தை வைப்பீடு செய்யவில்லை என்றால், அவரது பெற்றோர்களே பாதுகாவர்களாக இருந்து தாங்களே பராமரித்து சொல்லி எழுதிக்கொடுத்துள்ளார்கள். இளவரை பெற்றோர்கள் பராமரித்து கொள்வதாக என்னுடை கிரய ஆவணத்தில் வாசகம் எதுவும் இல்லை என்றால், சரியல்ல. இளவர் சொத்து வாங்குவதற்கு முன்பாக நான் தகுந்த நீதிமன்றத்தில முன் அனுமதி எதுவும் பெறவில்லை என்றால், தெரியாது. வாதிக்கு தாவா சொத்தில் 9/64 பாகம் சட்டப்படி இருப்பதால் நான் நீதிமன்றத்தில் முன் அனுமதி பெறாமல் கிரயம் பெற்றதால் என்னுடைய கிரயமே செல்லத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

5. நான் கிரயம் பெற்ற மாரிமுத்துவிற்கு மது அருந்தும் பழக்கம் இருக்கிறது

என்றால், தெரியாது. மாரிமுத்துவின் மது பழக்கத்தை பயன்படுத்தி அவ்வப்போது அவருக்கு சிறுக சிறுக பணம் கொடுதது அவரை ஏமாற்றி சொத்தை எழுதி வாங்கிவிட்டேன் என்றால், சரியல்ல. முத்துசாமியின் பெயரிலுள்ள டி கார்டை நான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால், ஆமாம்.

6. முத்துசாமி பெயரிலுள்ள டி கார்டை நான் கிரயம் பெற்றபோது மாரிமுத்துவிடம் பெற்றேனா என்றால், நியாபகம் இல்லை. கிரயத்தொகையை எங்கு வைத்து கொடுத்தேன் என்றால், சார் பதிவாளர் அலுவலகத்தில் கொடுத்தேன். ஒப்பந்தத்தின் போது ரூ.25,000 கொடுத்தேன். கிரய ஒப்பந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்க வில்லை என்றால், நியாபகம் இல்லை. தாவா சொத்தில் வாதிக்கு பங்கு இருப்பதால் நீதிமன்றம் அனுமதி பெறாமல் நான் வாங்கிய கிரயமே செல்லாது என்றால், சரியல்ல. வாதியும், தாவா சொத்தில் இன்றைய தேதிவரையிலும் அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால், சரியல்ல.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Ending Time: 12.40 P.M.

ஒப்பம்/- என். திலகேஸ்வரி
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.